**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி II - 2021**

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி ஐஐ இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஐ மற்றும் 3484 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் (யுபநஉெந குசயஉெயளைந னுந னுநஎநடழிஅநவெ) இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 17 ஆம் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரையின் 3.4.4 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மின்வலு அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. நிலையான முறைமை செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அதிகரித்த மின்வலு தேவையை உள்வாங்குதல் மற்றும் மின்வலு முகாமைத்துவத்தை மீளசெயற்படுத்துல் என்பவற்றிற்கு மின்விநியோக உப நிலையங்கள் மற்றும் அதனுடன் இணைந்த வரிசைகளின் நிர்மாணத்துடன் நாட்டில் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 39,453 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 264.7 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,793 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 184.7 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் இனால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர், 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளா் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

ஜ

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நி-கழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா (மில்லியன்) | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டமானது நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக காட்டப்படவில்லை. | 279.8 | நடைமுறை வேலை மீதியில் இ.மி.ச இன் பங்களிப்பினை அடைவதற்காக வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டம் நீக்கப்பட்டுள்ளது. எனவே, தனித்தனியாக இதனை வெளிப்படுத்துவதற்காக வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்ட வீதம் உரிமையாண்மைக்குள் உள்ளடக்கப்படுவதில்லை | நிதிக்கூற்றுக்களின் உரிமையாண்மையின் கீழ் தனித்தனியாக வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது நட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 வரையான செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கி கணக்குகளில் பராமரிக்கப்படும் விஷேட வெளிநாட்டு நாணய வங்கி கணக்குகளில் பெறப்பட்ட வட்டி வருமானமானது நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்படுவதற்கு பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ளது. எல்கேஏஎஸ் 07 இன் பிரகாரம் அத்தொகையினது வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக வெளிப்படுத்தப்படவில்லை என தெரிய வந்துள்ளது. | 8.34 | ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் இடமிருந்து பெறப்பட்ட நிதிகளினை பயன்படுத்தப்படும் வரை வெளிநாட்டு நாணய வங்கி கணக்குகளில் வைப்பிடலிடப்பட்டுள்ள நிதியினை இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடாக கருத முடியாது என்பதுடன் அதன்மீது ஈட்டப்பட்ட வருமானத்தினை இலங்கை மின்சார சபைக்கு கிடைத்த முதலீட்டின் மீதான வருமானமாகவும் கருத முடியாது. | பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளில் இது திருத்தப்பட வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வட்டி, பொறுப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டணமாக இலங்கை அரசாங்கத்தினால் ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் இற்கு செலுத்தப்பட்ட தொகையினை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு செல்லப்படவில்லை. | 137.49 | செயற்திட்டத்துடன் இவை தொடர்புடையதாக காணப்பட்ட போதிலும் முறையான கொடுக்கல் வாங்கல் அடிப்படையின்றி இதனை கிர-யமொன்றாக கணிப்பிடமுடியாதுள்ளது. இலங்கை அரசாங்கம் மற்றும் ஏஎவ்டி இரண்டும் இதுவரை இலங்கை மின்சார சபைக்கு மேற்கூறிய கட்டணங்கள் தொடர்பாக எவ்வித உர-ிமைகோரலையும் மேற்கொள்ளவில்லை. | வட்டி, பொறுப்பு மற்றும் மதிப்பீட்டு கட்டணங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கணக்குகளின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2016 யூன் 10 ஆம் திகதிய 2/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு அல்லது இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் நிகழ்ச்சித்திட்டத்தின் பரிமாற்றங்களை கணக்காய்வு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. | செயற்திட்டத்தின் முழுமையான கணக்காய்வுகளை உள்ளக கணக்காய்வு கிளை மேற்கொள்கின்றதனால் தனியானதொரு உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையில் தொடர்ச்சியாக செயற்திட்ட செயன்முன்னேற்றம் கண்காணிக்கப்படுகின்றது. மேலும், எரிசக்தி மற்றும் மின்வலு அமைச்சு, ஈஆர்டி மற்றும் திறைசேறியின் செயற்திட்ட கண்காணிப்பு திணைக்களம் என்பவற்றினால் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவொன்றின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மின் பரிமாற்ற உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், நடுத்தர-மின்னழுத்த வலையமைப்பின் வினைத்திறனை மேம்படுத்துதல், எரிசக்தி வினைத்திறன் நோக்கங்களிற்கான கேள்விப்-பக்க முகாமைத்துவம் என்ற பெயரிலான 03 பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆறு பொதிகளின் கீழ் ஒப்பந்தங்களினை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ஏனைய இரு பொதிகளினை மின் பரிமாற்ற உட்கட்டமைப்பினை மேம்படுத்தல் கூறினுள் 2020 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டன. எனினும், பட்டியல்படுத்தப்பட்ட திகதியான 2016 யூலை 31 இல் இருந்து 02 ஆண்டுகளிற்கு மேலான தாமதத்துடன் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தாமதங்களினை குறைப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமல் செயற்பாடுகள் தொடரப்பட்டன. அதன் காரணமாக, விலை வேறுபாடுகள், பொறுப்புக் கட்டணம்

மற்றும் செயற்திட்டத்தின் காலப்பகுதியினை நீடித்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தத்தின் மீது மேலதிக செலவு ஏற்படும் என்ற ஆபத்தினை கணக்காய்வில் மறுக்கமுடியாதுள்ளது. பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கூறுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ----- | ---------- | ------------------------- | ---------------------- |
| **(அ)** (i) | **மின் பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்** ஹம்பாந்தோட்டை 220/33 கே மின் விநியோக துணை நிலையத்தின் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் 2018 இல் வழங்கப்பட்டு 2018 திசெம்பர் 04 இல் நடைமுறைக்கு வந்தது, மற்றும் 2022 பெப்ரவரி 01 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், புதிய பொல்பிடிய - ஹம்பாந்தோட்டை 220 கே.வி, 150 கி.மீ மின் பரிமாற்ற வரிசையின் நிர்மாணத்தின் மெதுவான செயன்முன்னேற்றம் காரணமாக கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 05 வரையிலும் பூர்த்தி செய்யப்பட முடியவல்லை என்பதுடன் செயற்திட்ட காலப்பகுதியினுள் ஒப்பந்த பணிகள் நிறைவு செய்யப்படும் என்பதும் கேள்விக்குறியாக உள்ளது. | **ஹம்பாந்தோட்டை மின் விநியோக துணை நிலையம்** - செயற்திட்டத்தின் அனைத்து நிர்மாணம், ஆணையிடுதல் மற்றும் வலுவூட்டல் பணிகள் 2021 பெப்ரவரி 01 இல் பூர்த்தி செய்யப்பட்டன. எனினும், பொல்பிடிய - ஹம்பாந்தோட்டை 220 கேவி வரிசை நிர்மாணப் பணிகள் 2022 ஒக்தோபர் வரை தொடர்கின்றது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | புதிய பொல்பிடிய - ஹம்பாந்தோட்டை 220 கேவி மின் பரிமாற்ற வரிசையினை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2018 ஆகஸ்ட் மாதத்தில் நடைமுறைக்கு வந்தது, மற்றும் 2022 மே 18 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 452 கோபுரங்களில், 150 கிலோமீற்றர் கொண்ட கோபுர வரிசையின் கீழ் 399 கோபுரங்களின் அடித்தள பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 272 கோபுரங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, மற்றும் 150 கிலோமீற்றரில் 50 கிலோமீற்றரின் கட்டுதல் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினை நிறைவு செய்யும் திகதியானது 2022 ஒக்தோபர் 18 வரை நீடிக்கப்பட்டது. கொவிட் 19 தொற்றுநோய், நிர்மாண மூலப்பொருள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (iii) | பெறப்பட்ட தகவலின் பிரகாரம் 24 கி.மீ நீளமான பாதுக்கை – ஹொறன வரையான 132 கேவி மின் பரிமாற்ற வரிசையின் நிர்மானத்தின் மீது குறைவான பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றமாக முறையே 23 மற்றும் 38 சதவீதம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், 95 கோபுரங்களில், 04 கோபுரங்களின் அடித்தள பணிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது, மற்றும் 24 | செயற்திட்டத்தினை நிறைவு செய்யும் திகதியானது 2022 திசெம்பர் 16 வரை நீடிக்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் 2022 ஆகஸ்ட் 05 இல் உள்ளபடியாக ஆரம்பிக்கப்படாத போதிலும் 90 கோபுரங்களில், 28 கோபுர அடித்தளங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கிலோமீற்றர் நீளமான கோபுர வரிசையின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக எவ்விதமான கட்டுமானப் பணிகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. | | |
| (iv) | கொட்டுகொட, கொலன்னாவ, ஹொரண, பாதுக்க, தெஹிவளை மற்றும் மாதம்பே மின்விநியோக உப நிலையங்களினை விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2018 ஒக்தோபர் 22 இல் நடைமுறைக்கு வந்து, மற்றும் 2021 செப்தெம்பர் 30 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 03 வரையிலும் ஒப்பந்த பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | **துணை பகுதி 1:** தெஹிவளை மற்றும் மாதம்பே மின் விநியோக உப நிலையத்தின் விரிவாக்கம்: பூர்த்தி செய்யப்பட்டுள்ளது<br>**துணை பகுதி 2:** கொட்டுகொட, கொலன்னாவ, ஹொரண மற்றும் பாதுக்க உப நிலையத்தின் விரி-வாக்கம்: ஹொரண மற்றும் பாதுக்க என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது<br><br>மின்சாரத்தினை பெறுவதில் உள்ள சிரமங்களினால் கொட்டுகொட விரிவாக்கப் பணி தாமதமாக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| **(ஆ)** | **நடுத்தர-மின்னழுத்த வலையமைப்பின் வினைத்திறனை மேம்படுத்துதல்** | | |
| (i) | ஐந்து 33 கேவி நடுத்தர மின்னழுத்த விநியோக வரிசைகள் மற்றும் கேன்ட்ரிகளின் (பயவெசநைள) நிர்மானத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் ஒப்பந்தமானது 2019 திசெம்பர் 03 இல் வந்ததது, மற்றும் ஒப்பந்தக்காரர் 09 மாத கால தாமதத்துடன் 2020 செப்தெம்பர் 21 இல் ஒப்பந்த பணிகளினை ஆரம்பித்தார். ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 02 இல் ஒப்பந்த பணிகளினை பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 03 வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | கொவிட் 19 நிலைமை காரணமாக இலங்கை அரசாங்கத்தினால் இடைக்கிடையே விதிக்கப்பட்ட முடக்கத்தினால் 2020 மார்ச் 11 தொடக்கம் நிர்மாணப் பணி பாதிப்படைந்தது. அனைத்து தளங்களும் இக்காலப்பகுதியின் போது மூடப்பட்டு நிர்மாண செயற்பாடுகள் தாமதமாக்கப்பட்டன. அதன் காரணமாக, ஈஓடி (1வது) 2022 யூன் 07 வரையும் இரண்டாவது ஈஓடி 2022 நவம்பர் 07 வரையும் வழங்கப்பட்டது. | -மேற்படி- |
| (ii) | றத்தனபிடிய ஆரம்ப துணை மின் நிலையத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் மற்றும் பெலிகஹெ மற்றும் எதுல்கோட்டே ஆரம்ப துணை மின் நிலையத்தின் வரி-வாக்கம் 2019 திசெம்பர் மாதத்தில் வழங்கப்பட்டதுடன் 07 மாத தாமதத்துடன் 2020 யூலை 08 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது, மற்றும் 2022 செப்தெம்பர் 20 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக றத்தனபிடியவில் தெரிவு செய்யப்பட்ட காணியானது கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 05 வரையிலும் கொள்வனவு செய்யப்படவில்லை. | 2019 நவம்பர் மாதத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அதே மாதத்தில் இலங்கை மின்சார சபையின் இயக்குனர் சபை கலைக்கப்பட்டது. சபை நியமிக்கப்படும் வரை ஒப்பந்தத்தை கைச்சாத்திடல் பிற்போடப்பட்டது. றத்தனபிடிய காணியின் பௌதீக உடைமை இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது, ஆனால் நட்டஈடு வழங்கும் நடைமுறை தொடர்கின்றது. | -மேற்படி- |

இக்காரணங்களினால், கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 05 வரையிலும் பௌதீக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | **எரிசக்தி வினைத்திறனிற்காக கேள்விப்-பக்க முகாமைத்துவம்**<br>நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் பொதி 06 இன் கீழான ஸ்மார்ட் மீற்றர் செயற்திட்டத்தின் பணிகள் 2017 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியில் விளம்பரப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இப்பொதியின் கீழான ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டில் விளம்பரப்படுத்தப்பட்டு 2021 மார்ச் 22 இல் விலைமனு மூடப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2022 ஆகஸ்ட் 05 வரையிலும் குறித்துரைக்கப்பட்ட ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. | விலைமனுதாரரின் கோரிக்கையின் பேரில், எண்ணக்கருவின் ஆதாரத்ததை பூர்த்தி செய்வதற்கான காலக்கெடு 2022 செப்தெம்பர் 23 வரை நீடிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொளவதற்காக நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |

**3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 37,880 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், ரூபா 20,920 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 143 மில்லியன் தொகை மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37,880 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 259.9 மில்லியன் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அத் திகதியில் உள்ளவாறு உரிய இலக்குகளில் 55 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மெதுவாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, ரூபா 549.6 மில்லியன் தொகை பொறுப்புக் கட்டணங்களாக கடன் வழங்கும் முகவர் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் 2017 சனவரியில் நடைமுறைக்கு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் 2017 யூலை மாதத்திலிருந்தே நடைமுறைக்கு வந்திருந்தது, மற்றும் ஏஎவ்டி (யுகுனு) கடன் மே 2019 இல் நடைமுறைக்கு வந்தது. மேலும், ஆரம்ப சுற்றுச்சூழல் அனுமதிமதிகள் தாமதங்களை ஏற்படுத்தியது. | செயற்திட்ட நிர்வாக கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 3.3 புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பெறப்பட்ட கடன் பெறுவனவுகளில், 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியின் போது ரூபா 218.97 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 35 மோட்டார் வாகனங்கள் நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், 35 மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் ஒப்பந்ததாரர்களின் பெயரில் காணப்பட்டது. முன்னைய கணக்காய்வு அறிக்கையில் இது குறிப்பிடப்பட்ட போதிலும், அந்தந்த மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவத்தை அமுல்ப்படுத்தல் முகவரிற்கு மாற்றுவதற்கும் அதன் மீது தரவுத்தளத்தை பேணுவதற்கும் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்கூறிய வாகனங்களின் பெறுமானத்தேய்வானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | அனைத்து 35 வாகனங்களுக்காகவும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டவைகள் 2021 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றுக்கு (நடைமுறை வேலையின் கீழ்) கொண்டு செல்லப்பட்டுள்ளது. செயற்திட்டம் நிறைவடைந்தவுடன் சம்பந்தப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது மோட்டார் வாகனங்களின் உரிமையை இலங்கை மின்சார சபைக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | இலங்கை மின்சார சபைக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைப்பதற்காக ஒப்பந்த ஆவணங்களின் சரத்துக்கள் மாற்றம் செய்யப்பட வேண்டும். |